# ஸ்காட்லாந்தில் உடல்நலப் பராமரிப்பை அணுகுவது எப்படி?

ஏப்ரல் 2011

Access to health care - Tamil

இச்சிற்றேடு ஸ்காட்லாந்தில் உடல்நலப் பராமரிப்பை எவ்வாறு அணுகுவது என்பது குறித்த தகவல்களை அளிக்கின்றது. உங்களுடைய புகலிட செயல்முறை மேற்கொள்ளப்பட்டிருக்கும் வேளையிம் அதற்கு அப்பாலும் நீங்கள் உடல்நலப் பராமரிப்பை பெறுவது குறித்த உங்களுடைய கேள்விகளுக்கு இது பதிலளிக்கிறது.

HAPPY TO TRANSLATE

**என்னால் ஸ்காட்லாந்தில் உடல்நலப் பராமரிப்பைப் பெற முடியுமா?**

- ஆம், பெரும்பாலான உடல்நலப் பராமரிப்பு தேசிய சுகாதாரச் சேவையால் (NHS) ஸ்காட்லாந்தில் அளிக்கப்படுகிறது. ஸ்காட்லாந்தில் வசிக்கிற ஒவ்வொருவருக்கும் NHS உடல்நலப் பராமரிப்பிற்கான உரிமை ஒரு குறிப்பிட்ட நிலை வரைக்கும் கிடைக்கும்.
- நீங்கள் ஒரு புகலிடம் கோருபவராகவோ அல்லது ஒரு அகதியாகவோ இருந்தால், இச்சேவைகளில் பல உங்களுக்கு இலவசமாகக் கிடைக்கும்.

**நான்:**

**ஆரம்பகாலத்தில் தங்கவைக்கப்படும் போது எவ்வாறு உடல்நலப் பராமரிப்பைப் பெறுவது (நீங்கள் வழக்கமாக 2 – 4 வாரங்கள் இங்கு தங்குவீர்கள்)?**

- உங்களுக்கு ஏதாவது அவசரமான மருத்துவ கவனிப்பு தேவையிருந்தால், நீங்கள் எமது ஸ்காட்லாந்து தொடக்கப்பயிற்சிச் சேவை (SIS) அலுவலகத்தினை திங்கள் முதல் வெள்ளி வரை காலை 9.30க்கு மருத்துவ நுழைவு நேரத்தின்போது தொடர்பு கொள்ளவும்.
- ஆரம்பகாலத் தங்குதலின் போது, ஃபெர்னபேங்க் மருத்துவ மையத்திலுள்ள மருத்துவர்களில் ஒருவரிடம் தற்காலிகமாகப் பதிவு செய்யப்படுவீர்கள். இது 194 Fernbank Street, Springburn, Glasgow, G22 6BD என்ற முகவரியில் உள்ளது.
- மருத்துவருடனான உங்களுடைய நியமனசந்திப்பை நீங்கள் எமது ஸ்காட்லாந்து தொடக்கப்பயிற்சிச் சேவை (SIS) அலுவலகம் வாயிலாக திங்கள் முதல் வெள்ளி வரை காலை 9.30க்கு மருத்துவ நுழைவு நேரத்தின்போது செய்து கொள்ளவும்.

**நீண்ட காலத் தங்குதலுக்காக (பரவுதல் எனப்படுவது) இடம்பெயர்ந்த பிறகு, நான் எவ்வாறு உடல்நலப் பராமரிப்பை அணுகுவது ?**

- நீங்கள் உள்ளூர் மருத்துவர் ஒருவரிடம் ஒப்படைக்கப்படுவீர்கள்
- உங்களுடைய மருத்துவர் பதிவு அட்டை நீங்கள் புதிய முகவரிக்கு வந்து சேர்ந்த 48 மணி நேரத்திற்குள்ளாக அனுப்பி வைக்கப்படும். உங்களுக்கு இந்த அட்டை வந்து சேரவில்லை என்றால், நீங்கள் உங்களுக்கு தங்குமிடம் அளிப்பவருடன் தொடர்பு கொள்ளவேண்டும்.
- உங்களுடைய மருத்துவர் பதிவு அட்டையானது உங்களுடைய புதிய மருத்துவரின் பெயர், முகவரி மற்றும் தொடர்பு எண்ணை உங்களுக்குத் தெரிவிக்கிறது.
- நீங்கள் உங்களுடைய மருத்துவர் பதிவு அட்டையைப் பெற்றுவிட்டீர்கள் என்றால், பதிவு செய்வதை முடிக்கும் பொருட்டு நீங்கள் உங்களது பொறுப்பு மருத்துவரின் அலுவலகத்திற்கு (அறுவைசிகிச்சை) செல்வது மிகவும் முக்கியமாகும். நீங்கள் பதிவினை முடித்தால்தான் உடல்நல சேவைகளை உங்களால் அணுக முடியும்.

நான்:

**அகதி நிலை அல்லது தங்குவதற்கான விடுப்பு வழங்கப்பட்டால் எவ்வாறு உடல்நலப் பராமரிப்பை அணுகுவது?**

- அகதிகள் நிலை அல்லது தங்குவதற்கான விடுப்பை நீங்கள் பெறுவதில் வெற்றி பெற்றால், ஸ்காட்லாந்திலும் மற்றும் யு.கே முழுவதிலும் இலவச உடல்நலப் பராமரிப்பினை நீங்கள் தொடர்ந்து அணுகலாம். நீங்கள் மற்றொரு பகுதிக்கு இடம்பெயர்ந்து செல்ல விரும்பினாலொழிய, உங்களது தற்போதைய மருத்துவரிடம் தொடர்ந்து பதிவாகியிருப்பீர்கள். நீங்கள் வேறொரு பகுதிக்கு இடம்பெயர்ந்தால், அங்குள்ள உள்ளூர் மருத்துவரிடம் அவர்களது அலுவலகத்தில் (அறுவைசிகிச்சை) நீங்கள் பதிவு செய்துகொள்ள முடியும்.

**எனக்கு அகதி நிலை அல்லது தங்குதற்கான விடுப்பு வழங்கப்படாவிட்டால் நான் எவ்வாறு உடல்நலப்பாதுகாப்பை அணுகுவது?**

- உங்களது புகலிடக் கோரிக்கைக்கான எதிர்மறை முடிவிற்கு எதிராக நீங்கள் மேல்முறையீடு செய்கிறீர்கள் என்றால், முடிவு ஒன்று செய்யப்படும் வரை நீங்கள் இலவச உடல்நலப் பராமரிப்பினை தொடர்ந்து பெறலாம்.

- உங்களது புகலிடத்திற்கான கோரிக்கை மறுக்கப்பட்டிருந்து, அத்துடன் அம்முடிவிற்கு எதிரான எந்த மேல்முறையீடுகளும் தோல்வியடைந்திருந்து நீங்கள் யு.கே-வில் இன்னமும் தங்கியிருந்தால், நீங்கள் ஸ்காட்லாந்தில் இருக்கும் வேளையில் NHS யிடமிருந்து உடல்நலப் பராமரிப்பை உங்களால் இன்னமும் பெற முடியும்.

**அவசர காலத்தில் உடல்நலப் பராமரிப்பை அணுகுவது எப்படி?**

- நீங்களோ அல்லது குடும்ப உறுப்பினர் ஒருவரோ கடுமையாக நோய்வாய்ப்பட்டிருந்தால் அல்லது மோசமாக காயமடைந்திருந்தால், நீங்கள் உங்களுடைய உள்ளூர் மருத்துவமனையின் விபத்து மற்றும் அவசரசிகிச்சைப் பிரிவுக்கு (A&E) வரவேண்டும். விபத்து மற்றும் அவசரகாலம் ஒன்றின் போது உங்களை அழைத்துச் செல்ல ஒரு அவசரஊர்தி தேவைப்பட்டால், நீங்கள் 999 யை அழைக்க வேண்டும். 999 என்பது உடனடி உதவிக்காக அவசரகாலச் சேவைகளுடன் தொடர்பு கொள்ள அனுமதிக்கும் ஒரு அதிகாரபூர்வமான அவசரகாலத் தொலைபேசி எண்ணாகும். இது அவசரகாலத்தின் போது மட்டுமே உபயோகப்படுத்த வேண்டிய ஒன்றாகும்.
- மருத்துவமனையில் விபத்து மற்றும் அவசரசிகிச்சைப் பிரிவு (A&E) 24 மணி நேரமும் வாரத்தின் 7 நாட்களும் செயல்படுகிறது.
- மருத்துவமனையில் விபத்து மற்றும் அவசரசிகிச்சைப் பிரிவுக்கு வர சந்திப்புநியமனம் எதுவும் தேவையில்லை, ஆனால் டாக்டர் அல்லது செவிலியால் நீங்கள் கவனிக்கப்பட சிறிது நேரக் காத்திருப்பு தேவைப்படலாம்.

**நான் மருத்துவர் ஒருவருடன் பதிவு செய்து கொள்ளவில்லை என்றால் என்ன செய்ய வேண்டும்?**
நீங்கள் மருத்துவர் ஒருவரிடம் பதிவு செய்துகொள்ளவில்லை என்றால், உங்களுக்கு தங்குமிடம் அளித்தவரை அல்லது ஏதாவது உள்ளூர் அகதிகள் நிறுவனத்தை நீங்கள் தொடர்பு கொள்ளவேண்டும். அவர்கள் ஆலோசனை வழங்குவர். மேலும் உங்கள் பகுதியில் எப்படி பதிவு செய்வது என்பது குறித்தும் உங்களுக்கு அறிவுறுத்துவர்.

**NHS ஆல் வழங்கப்படும் சேவை ஒன்றில் உங்களுக்கு மகிழ்ச்சியில்லை எனில், நான் என்ன செய்ய வேண்டும்?**

நீங்கள் இவற்றை நினைவில் கொள்ள வேண்டியது மிகவும் முக்கியமாகும்:

- நீங்கள் NHS உடல்நலப் பராமரிப்பைப் பெறும் வேளையில் மற்ற நபர்கள் நடத்தப்படுவதைப் போன்றே நீங்களும் மரியாதையுடனும், கண்ணியத்துடனும் சரிசமமாக நடத்தப்பட வேண்டும்.

- உங்களுடைய NHS நியமன சந்திப்புகளுக்காக நீங்கள் ஒரு உரைபெயர்ப்பாளரைக் கேட்டுப் பெறுவதற்கு உங்களுக்கு உரிமையுள்ளது. உங்களுக்கான உரைபெயர்ப்பாளர் ஆணாகவோ அல்லது பெண்ணாகவோ இருக்க வேண்டும் என்று நீங்கள் விரும்பினால், அவ்வாறே நீங்கள் கேட்டுப் பெறலாம். உங்களுடைய நியமன சந்திப்புக்காக நியமிக்கப்படும் உரைபெயர்ப்பாளர் குறித்து உங்களுக்கு மகிழ்ச்சியில்லை எனில், நீங்கள் உடனடியாக NHS ஊழியர் ஒருவரிடம் தெரிவிக்க வேண்டும். உதாரணமாக, நீங்கள் தனிப்பட்ட முறையில் அந்த உரைபெயர்ப்பாளரை அறிந்திருந்து, உங்களுடைய தனிப்பட்ட தகவல்களை அவர்களிடம் வெளியிடுவதற்கு உங்களுக்கு தயக்கமிருந்தால் அல்லது உங்களுடைய குறிப்பான வட்டார மொழியை நீங்கள் புரிந்து கொள்ளும் அளவுக்கு அந்த உரைபெயர்ப்பாளருக்கு பேசத் தெரியவில்லை மற்றும் அவரால் புரிந்துகொள்ள முடியவில்லை எனில், அது குறித்து நீங்கள் NHS ஊழியர் ஒருவரிடம் தெரிவிக்க வேண்டும்.

- உங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள மருத்துவருக்கு (ஜிபி) பதிலாக வேறொரு மருத்துவரை அந்த அலுவலகத்தில் (அறுவைசிகிச்சை) ஒதுக்குமாறு கேட்பதற்கு உங்களுக்கு உரிமையுள்ளது. உதாரணத்திற்கு, நீங்கள் ஒரு பெண்ணாக இருந்து, நீங்கள் ஒரு பெண் மருத்துவரை அல்லது ஒரு பெண் மருத்துவச் சிகிச்சையாளரைக் காண விரும்பினால், அவ்வாறே நீங்கள் கேட்டுப் பெறலாம். சாத்தியமான இடத்தில் உங்களுடைய வேண்டுகோள் நிறைவேற்றித் தரப்படும்.

NHS ஆல் வழங்கப்படும் சேவை ஒன்றுடன் நீங்கள் மகிழ்ச்சிகொள்ளவில்லை எனில் அல்லது NHS-க்காக பணிபுரியும் யாரேனும் ஒருவரால் வழங்கப்படும் மோசமான அல்லது பற்றாத சேவையை நீங்கள் பெற்றுள்ளீர்கள் என நீங்கள் நம்பினால், புகார் ஒன்றைச் செய்வதற்கு உங்களுக்கு உரிமையுள்ளது. புகார் ஒன்றைச் செய்வது உங்களுடைய குடிவரவு நிலைமையையோ அல்லது உங்களின் புகலிடக் கோரலையோ **பாதிக்காது.**

புகார் ஒன்றைச் செய்வது குறித்து மேலும் அதிகத் தகவல்களுக்கு, உங்களின் உள்ளூர் ஆலோசனை சேவையை தொடர்புகொள்ளவும் அல்லது NHS புகார்கள் துறையை 0141 201 4500 என்ற எண்ணில் அழைக்கவும் அல்லது complaints@ggc.scot.nhs.uk என்ற முகவரிக்கு மின்னஞ்சல் செய்யவும். புகார் ஒன்றை அளிப்பது தொடர்பான மேலும் அதிக தகவல்களைத் தாங்கிய இளம் நீல நிற 'கருத்துகள், கவலைகள் மற்றும் புகார்கள்' சுவரொட்டிகள் அனைத்து NHS வளாகங்களிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.